



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 242 | 24.2.2026 | TUESDAY | MAASI : 12 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 242 | 24.2.2026 | செவ்வாய்கிழமை | மாசி : 12 | விலை : ரூ.5/– |


## தமிழகத்தில்

# "5.67 கோடி வாக்காளர்கள்"

## 74 லட்சம்+ பெயர்கள் நீக்கம்!



சென்னை: பிப்.24–

தமிழகத்தில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் இருப்பதாக, மாநில தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025ல் தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 6.41 கோடியாக இருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 5.67 கோடியாக குறைந்துள்ளதால், சமீபத்திய எஸ்ஐஆர் நடவடிக்கை மூலம் தமிழகத்தில் நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை 74 லட்சமாக உள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு "27.10.2025 தேதியின் நிலவரப்படி, 6,41,14,587 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். சிறப்பு தீவிர திருத்தம் 2026இன் கீழ் கணக்கெடுப்பு கட்டம் முடிந்த பிறகு, மொத்தம் 5,43,76,756 வாக்காளர்களின் பெயர்களைக் கொண்ட வரைவு பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 19.12.2025 முதல் 30.01.2026 வரையிலான ஏற்புரைகள் மற்றும் மறுரைப்புரைகளுக்கான காலத்தில், 27.53 லட்சம் தகுதியுள்ள வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் 4.23 லட்சம் தகுதிபெறாத நபர்கள் நீக்கப்பட்டனர். அதன்படி, தகுதியுள்ள வாக்காளர்களைக் கொண்ட 2026ன் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அந்தப் பட்டியலில், தமிழகத்தில் மொத்தம் 5,67,07,380 வாக்காளர்கள் உள்ளனர். அதில், ஆண் வாக்காளர்கள் 2,77,38,925, பெண் வாக்காளர்கள் 2,89,60,838 மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 7,617 நபர்கள் உள்ளனர்.

இன்றைய நிலவரப்படி, இதில் 1819 வயதுக்குட்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 12.51 லட்சம், மாற்றுத் திறனாளிகள் எனக் குறிக்கப்பட்ட வாக்காளர்கள் 4.63 லட்சம் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் வாக்காளர்கள் (85+ வயதினர்) 3.99 லட்சம் ஆகும்.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியலின்படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட 27சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 5,36,991 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,62,621; பெண்கள் 2,74,254 ; மூன்றாம் பாலினத்தவர் 116).

இதற்கு அடுத்தப்படியாக திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட 6ஆவடி சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 4,28,772 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,09,662 பெண்கள் 2,19,035; மூன்றாம் பாலினத்தவர் 75) உள்ளனர்.

தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 18 துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,16,896 ஆவர். (ஆண்கள் 58,221; பெண்கள் 58,620; மூன்றாம் பாலினத்தவர் 55).

இதற்கு அடுத்தப்படியாக இரண்டாமிடத்தில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16எழும்பூர் சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,34,879ஆவர் (ஆண்கள் 65,677, பெண்கள் 69,149: மூன்றாம் பாலினத்தவர் 53).

வாக்காளர் பட்டியலினை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான https://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம். அதில் வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சரிபார்த்துக் கொள்ளலாம். வாக்காளர் பதிவு அலுவலரின் முடிவுக்கு எதிரான மேல்முறையீட்டை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 பிரிவு 24(a) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960இன் விதி 27 இன் கீழ் 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

முதல் மேல்முறையீட்டு தீர்ப்பில் அதிருப்தி அடைந்தால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். 1950 பிரிவு 24(b) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960இன் விதி 27ன்படி மாவட்ட ஆட்சியரின் உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தலைமை தேர்தல் அதிகாரியிடம் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

வாக்காளர்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்து, தேவையானால் பெயர் சேர்க்க (படிவம்6), திருத்தம் (படிவம்8) அல்லது நீக்கம் (படிவம்7) செய்வதற்கான விண்ணப்பங்களை இணையம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18-19 வயதுக்குட்பட்ட முதல் முறையாக வாக்காளர்களாக பதிவு செய்தவர்களுக்கும், திருத்தங்களுக்கு விண்ணப்பித்த அல்லது தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்த ஏற்கனவே உள்ள வாக்காளர்களுக்கும், அவர்களின் பதிவு செய்யப்பட்ட குடியிருப்பு முகவரிக்கு விரைவு அஞ்சல் மூலம் வாக்காளர் அடையாள அட்டை (EPIC) வழங்கப்படும்.

தொடர் திருத்தக் காலம், 23.02.2026 முதல் நடைமுறையில் உள்ளது. 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்த, ஆனால் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் இல்லாத அனைத்து தகுதியுள்ள குடிமக்களும் பின்வரும் வழிகளில் விண்ணப்பிக்கலாம்:

1. வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6ஐ சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.

2. இணையம் மூலமாக https://voters.eci.gov.in/என்ற வலைதளத்திலும் விண்ணப்பிக்கலாம்.

3. கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து 'Voter Helpline App' செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

4. பொதுமக்கள் மாவட்ட தொடர்பு மையங்களை '1950' என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் 1800 42521950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணுடன் மாநிலத் தொடர்பு மையம் இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# “நீக்கப்பட்ட 328 உதவி பேராசிரியர்களை பணி நிரந்தரம் செய்க” அண்ணாமலை



சென்னை, பிப், 24-

பணி நீக்கம் செய்யப்பட்ட அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் 328 பேரை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று தமிழக அரசை, அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ‘‘தமிழகம் முழுவதுமுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் 16 உறுப்புக் கல்லூரிகளில், சுமார் 15 ஆண்டுகளாக பணியாற்றி வந்த 328 உதவிப் பேராசிரியர்களை, நிதி நிலைமை காரணம் கூறி, கடந்த ஜனவரி 31 அன்று பணிநீக்கம் செய்தது திமுக அரசு.

இந்த நிலையில், ஆசிரியர்கள் இல்லாததால், தமிழ் உட்பட பல்வேறு பாடங்களுக்கு, கடந்த இரண்டு மாதங்களாக வகுப்புகளே நடைபெறவில்லை. ஆனால், இன்று முதல் உள் தேர்வுகள் தொடங்கவிருக்கின்றன. இதனால், அண்ணா பல்கலைக்கழக மாணவர்கள், குழப்பத்தில் இருக்கிறார்கள். வகுப்பே நடத்தப்படாமல், மாணவர்களை உள் தேர்வு எழுதச் சொல்லுவது, கல்வி முறைக்கே அவமானம். தமிழ் பாடத்துக்கே ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்பதுதான், திமுக அரசு தமிழை வளர்க்கும் லட்சணம். அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டுமே, சுமார் 45.44% ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருபவர்களைப் பணி நிரந்தரம் செய்யாமல், காலிப் பணியிடங்களையும் நிரப்பாமல், மாணவர்களின் கல்வியை கேள்விக் குறியாக்கியிருக்கிறது திமுக அரசு.

பத்து ஆண்டுகளுக்கும் மேல் தற்காலிகப் பணியாற்றுபவர்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதி எண் 153 ல், கூறியிருந்த திமுக, அவர்களைப் பணி நீக்கம் செய்ததோடு மட்டுமல்லாமல், புதிய நியமனங்களையும் மேற்கொள்ளவில்லை.

அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, ஊதியம் வழங்க நிதி இல்லை என்று கூறி, மாணவர்களின் கல்வியை பாழாக்கிவிட்டு, இந்த ஆண்டு திமுக அரசு அறிவித்த பட்ஜெட்டில், அண்ணா பல்கலைக்கழகத்தை தரம் உயர்த்த ரூ.1,380 கோடி வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது தான், இந்த ஆண்டின் மிகப்பெரிய நகைச்சுவை. பொய்யான விளம்பரங்களை வைத்தே மக்களை ஏமாற்றி விடலாம் என்று கனவு காண்கிறார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.

உடனடியாக 328 பகுதி நேர ஆசிரியர்களையும் பணி நிரந்தரம் செய்து, மீண்டும் வகுப்புகளை தொடங்கி, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்க வேண்டும் என்று, திமுக அரசை வலியுறுத்துகிறேன்’’ என்று தெரிவித்துள்ளார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சொந்தச் செலவில் மூன்று சக்கர வாகனம் அமைச்சர் ஐ.பெரியசாமி அதிரடி அறிவிப்பு



ஆத்தூர், பிப்,24-

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்துள்ளார்.

*அமைச்சரின் அதிரடி வாக்குறுதி:*

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்ற அமைச்சர், உடனடியாக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தீர்வுகாண உத்தரவிட்டார். அப்போது, உடல் குறைபாடு குறைவாக இருப்பதால் அரசு உதவி பெற முடியாத நிலையில் இருந்த திமுக நிர்வாகி ஒருவரின் கோரிக்கையை ஏற்று, "விபத்தினால் பாதிக்கப்பட்ட மூத்த நிர்வாகிகளுக்கு எனது சொந்தச் செலவிலேயே மூன்று சக்கர வாகனங்கள் வழங்கப்படும்" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இதற்கான கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் போது தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், மாநகர பொருளாளர் மீடியா சரவணன், ஒன்றிய செயலாளர்கள் இன்பராஜ், பிள்ளையார்நத்தம் முருகேசன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் டென்னி, ரமேஸ், அக்பர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் நந்தகோபால், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த சித்தயன்கோட்டை மரக்காயர், மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி, நந்தி நடராஜன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# ஆவடி பகுதியில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு: ரூ.8.78 லட்சம் அபராதம் விதிப்பு



சென்னை. பிப்.24-

ஆவடி பகுதியில் அதிகாரிகள் நடத்திய ஆய்வில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, நுகர்வோருக்கு ரூ.8.78 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சென்னை மையம், வடக்கு, தெற்கு, மேற்கு, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அமலாக்க அதிகாரிகள் கடந்த 11ம் தேதி ஆவடி பகுதியில் கூட்டு ஆய்வு மேற்கொண்டனர்.


அப்போது 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து, மின் நுகர்வோருக்கு ரூ.8,77,593 அபராதம் விதிக்கப்பட்டது.

புகார் தெரிவிக்கலாம்:

மேலும், சம்பந்தப்பட்ட நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவியல் நடவடிக்கையை தவிர்க்க முன்வந்து அதற்குரிய சமரசத் தொகையாக ரூ.36 ஆயிரம் செலுத்தியதால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

மின் திருட்டு தொடர்பான தகவல்களை சென்னை அமலாக்க செயற்பொறியாளரிடம் கைபேசி 94458 57591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# சீமான் போட்டியிடுவதால் நட்சத்திர தொகுதியாக மாறிய காரைக்குடி



காரைக்குடி, பிப். 24-

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடியில் போட்டியிடுவதால் அத்தொகுதி நட்சத்திர தொகுதியாக மாறியுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய 4 தொகுதிகள் உள்ளன.

இதில் 3 தொகுதிகளுக்கு 8 மாதங்களுக்கு முன்பே நாம் தமிழர் கட்சியில் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். ஆனால், காரைக்குடி தொகுதிக்கு மட்டும் அமைதி காத்து வந்தனர். அப்போதே இத்தொகுதியில் சீமான் போட்டியிடுவார் எனப் பேசப்பட்டது. அது தற்போது திருச்சி மாநாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், காரைக்குடி நட்சத் திரத் தொகுதியாக மாறியுள்ளது.

சீமான் 2016ல் கடலூர் தொகுதியிலும், 2021 ல் திருவொற் றியூரிலும் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். ஆனால், இந்த முறை எப்படியும் வெற்றி பெறவேண்டுமென முனைப்புக் காட்டி வருகிறார்.

இதற்காக, அவர் தனது சொந்த மாவட்டத்தைத் தேர்வு செய்துள்ளதாகக் கூறுகின்றனர். ஓராண்டுக்கு முன்பே, செய்தியாளர்கள் சந்திப்பின்போது சொந்த மண்ணில் போட்டியிடுவேன் என்று சீமான் கூறியிருந்தார்.


அப்போதிலிருந்தே நாம் தமிழர் கட்சி யினர் காரைக்குடி தொகுதியில் தீவிரமாகத் தேர்தல் பணியில் ஈடுபட்டனர். கடந்த ஆண்டு நவம்பர் 27ம் தேதி காரைக்குடியில் மாவீரர் தினப் பொதுக்கூட்டத்தைக்கூட பிரம்மாண்டமாக நடத்தினர்.

கடந்த தேர்தலில் காரைக்குடியில் போட்டியிட்ட நாம் தமிழர் வேட்பாளர் துரை மாணிக்கம் 23,872 வாக்குகள் (11.24 சதவீதம்) பெற்றார். இந்தத் தொகுதியில் கடந்த முறை காங்கிரஸ், பாஜகதான் போட்டியிட்டன.

அதில் காங்கிரஸ் வெற்றிபெற்று மாங்குடி எம்எல்ஏவாக உள்ளார். இந்த முறையும் அவர் சீட் கேட்டு காய் நகர்த்தி வருகிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக சார்பில் மாவட்டத் தலைவர் பாண்டித்துரையும், அமமுக சார்பில் மாவட்டச் செய லாளர் தேர்போகி பாண்டியும் சீட் கேட்டு வருகின்றனர்.

தவெகவில் மாவட்டச் செயலாளர் மருத்துவர் பிரபு போட்டியிடுவதற்காக கடந்த ஓராண்டாக அனைத்து வேலைகளையும் செய்து வருகிறார். இந்த முறையும் திமுக, அதிமுக நேரடியாக களத்தில் இறங்காமல், கூட்டணிக் கட்சிகளுக்கே ஒதுக்க வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

# தெலங்கானாவில் மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி உட்பட 21 பேர் போலீஸில் சரண்



ஹைதராபா, பிப்.24-

மாவோயிஸ்டு இயக்கத்தின் கமாண்டர் தேவுஜி மற்றும் அவருடன் சேர்ந்து 20 பேர் போலீஸில் சரணடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

நாட்டில் மாவோயிஸ்டு, நக்சல்களின் வன்முறையை அடுத்த மாதம் மார்ச் 31ம் தேதிக்குள் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திட்டவட்டமாக கூறியுள்ளார். அதன்படி, ஆந்திரா, தெலங்கானா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான என்கவுன்ட்டர்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. இதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானோர் அந்தந்த மாநிலங்களில் சரணடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், தெலங்கானா மாநிலத்தில் தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியாவை (மாவோயிஸ்டு) சேர்ந்த கமாண்டர் திப்பிரி திருப்பதி (எ) தேவுஜி (எ) தேவ்ஜி (62) போலீஸில் சரணடைந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது. அவருடன் மேலும் 20 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, ’’மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி எங்களிடம் தான் இருக்கிறார். அவர் சரணடைந்தது குறித்து ஒன்றிரண்டு நாட்களில் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்வோம்’’ என்று கூறியுள்ளனர்.

கடந்த 2025ம் ஆண்டு மாவோயிஸ்ட் மூத்த தலைவர் நம்பலா கேசவ ராவ் (எ) பசவராஜ் என்கவுன்ட்டரில் இறந்தார். அவருக்குப் பதில் தேவுஜி அந்தப் பொறுப்புக்கு மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும், இந்தத் தகவல்களை மாவோயிஸ்டு அமைப்பு மறுத்துள்ளது. சரணடைபவர்களுக்கு பல்வேறு மறுவாழ்வு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

# “நேரு காட்டிய பாம்பு... ஏஐ காட்டும் பிரதமர்...” நிஷிகாந்த் ஒப்பீடு



புதுடெல்லி, பிப்,24-

பாஜக மூத்த தலைவர் நிஷிகாந்த் துபே தனது எக்ஸ் பக்கத்தில் ஒரு புகைப்படத்தை பதிவேற்றம் செய்துள்ளார்.

அதனுடன் வெளியிட்டுள்ள பதிவில், “காங்கிரஸ் பிரதமர் நேரு உலகத்துக்கு நாகின் டான்ஸ் (பாம்பு நடனம்) காட்டினார், பாஜகவின் பிரதமர் நரேந்திர மோடி உலகத்துக்கு தொழில் நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவை எடுத்துக் காட்டுகிறார்.

கோபம் வரத்தானே செய்யும்? இந்தப் படம் 1962ல் அப்போதைய அமெரிக்க அதிபர் கென்னடியின் மனைவி ஜாக்குலினை நேரு வரவேற்றபோது எடுத்தது’’ என்று கூறியுள்ளார்.



# அரசு பள்ளி நிகழ்வில் மகளிர் உரிமைத் தொகைக்கு எதிரான கருத்தால் சர்ச்சை

தென்காசி, பிப். 24-

தென்காசி மாவட்டம், செங்கோட்டையில் எஸ்ஆர்எம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

அதில் பேசிய தன்னார்வலர், ‘தமிழக அரசு ரூ.5 ஆயிரம் மகளிர் உரிமைத் தொகை வழங்கியது சரியா?, தவறா? என மாணவிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அந்த திட்டம் சரி என்று ஒரு மாணவி மட்டுமே கையை உயர்த்தியுள்ளார். மற்ற மாணவிகள் தவறு என்று கூறி கையை உயர்த்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோ காட்சி சமூக வலை தளங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது. அரசு பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசின் திட்டத்துக்கு எதிரான கருத்தை வெளிப்படுத்தியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது.

இந்நிலையில், செங்கோட்டை எஸ்ஆர்எம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஜீவா மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்து பள்ளிக்கல்வித்துறை இணை இயக்குநருக்கு தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா அனுப்பியுள்ள கடிதம் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

அந்த கடிதத்தில், ‘எஸ்ஆர்எம் பள்ளியில் சமீபத்தில் திடீர் ஆய்வு மேற் கொண்டபோது தலைமை ஆசிரியர் ஜீவா, விடுப்பு எதுவும் எடுக்காமல் பள்ளிக்கு வராமல் இருந்துள்ளார்.

பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தன்னார்வலர் பெண் ஒருவர் மாணவிகளி டையே அரசுக்கு எதிராகவும், அரசின் நலத்திட்டங்களை விமர்சித்தும் கேள்விகளை எழுப்பிய நிகழ்ச்சி சமூக வலைதளங்கயில் பரவி வருகிறது.

உரிய அலுவலர்களிடம் அனுமதி பெறாமல் இந்நிகழ்ச்சியை நடத்தியுள்ளார். மேலும், தலைமை ஆசிரி யருக்கான பொறுப்பை உதாசீனப்படுத்தியுள்ளார். தலைமை ஆசிரியர் ஜீவா இந்த பள்ளியில் தொடர்ந்து பணியாற்றினால் மாணவிகளின் கல்வி நலனுக்கு குந்தகம் ஏற்படும். தொடர்ந்து புகார்கள் வருவதால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று கூறியுள்ளார்.

# ஆப்கன் எல்லையில் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதல் பலி 80 ஆக அதிகரிப்பு



இஸ்லாமாபாத், பிப்,24-

ஆப்கனிஸ்தானுக்கு உட்பட்ட எல்லைப் பகுதிகள் மீது பாகிஸ்தான் விமானப் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80க்கும் மேலாக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையேயான எல்லைப்புற மோதல்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றன. தலிபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹார் மற்றும் பாக்டிகா மாகாணங்களில் அடிக்கடி பாகிஸ்தான் விமானப்படை வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், நேற்று திடீரென நங்கர்ஹார் பகுதியில் பாகிஸ்தான் விமானப் படை வான்வழித் தாக்குதலை நடத்தியது.

இந்த பயங்கரத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். எனினும், இந்த தாக்குதல் தெஹ்ரீக் இ தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) என்ற தங்கள் நாட்டில் தடை செய்யப்பட்ட அமைப்பினரை குறிவைத்து நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்லாமாபாத், பஜவுர், பன்னு ஆகிய இடங்களில் நடந்த தொடர் தற்கொலைப் படைத் தாக்குதல்களில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இந்த தாக்குதலில் 80க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பாகிஸ்தான் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும், பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் பாகிஸ்தான் மக்கள் பாதுகாப்புப் படையினருடன் உறுதியாக நிற்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் தகவல் ஒலிபரப்பு நாடாளுமன்றச் செயலாளர் டான்யால் சவுத்ரி வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘ஆப்கனிஸ்தான் பல பயங்கரவாத குழுக்களுக்கு புகலிடமாக உள்ளது. ஐநா அறிக்கையின்படி, 21 பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்த போராளிகள் ஆப்கனிஸ்தானில் இருந்து செயல்பட்டு வருகின்றனர். இது பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக, ஆப்கனிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாதிகளை மட்டுமே குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. அப்பாவி மக்களைப் பாதுகாக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பாகிஸ்தான் எப்போதும் அமைதியை விரும்புகிறது. ஆனால், ஆப்கனிஸ்தானின் மண், மறைமுகத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படுவதால், நமது நாட்டை பாதுகாப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. தேசிய பாதுகாப்பில் நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கன் எதிர்ப்பு:

பாகிஸ்தானின் இந்த தாக்குதலுக்கு ஆப்கனிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆப்கனிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘பாகிஸ்தான் நடத்திய தாக்குதல் ஆப்கனிஸ்தானின் இறையாண்மையை மீறிய செயல். இதற்கு பொருத்தமான நேரத்தில், பொருத்தமான பதில் அளிக்கப்படும்’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளாம்பாக்கம் ரயில் நிலைய பணிகள் நிறைவு: விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு திறக்க திட்டம்



சென்னை, பிப்.24-

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் கடந்த 2023ம் ஆண்டு டிசம்பரில் திறக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்தின் அருகில், தாம்பரம் செங்கல்பட்டு ரயில் பாதை இருக்கிறது.

இருப்பினும், ரயில் நிலையம் இல்லை. இதனால் இங்கு மின்சார, விரைவு ரயில்களை நிறுத்த முடியாத நிலை இருக்கிறது. இங்கு ரயில் நிலையம் அமைக்க பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, ரூ.20 கோடி மதிப்பீட்டில் வண்டலூர் ஊரப்பாக்கம் இடையே கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்படுவதற்கு தெற்கு ரயில்வே சென்னை ரயில்வே கோட்டம் கடந்த 2024ம் ஆண்டு அக்டோபரில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. இதையடுத்து, ஒப்பந்தம் வழங்கப்பட்டு, ரயில் நிலைய கட்டுமானப் பணிகள் தொடங்கி, அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன.

3 கட்டங்களாக பணி: அதே நேரத்தில், புதிய ரயில் நிலையத்தையும் ஜிஎஸ்டி சாலை யின் மறுபுறம் அமைந்துள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தையும் இணைக்கும் வகையில், பிரம்மாண்ட ஆகாய நடை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், 3 கட்டங்களாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நடைப்பாலத்தில் பயணிகளின் வசதிக்காக, இருபுறமும் மின்தூக்கிகள் அமைக்கப்பட உள்ளன. ஒட்டுமொத்தப் பணிகளும் இந்த மாதத்துக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், "கிளாம்பாககம் ரயில் நிலைய பணிகள் நிறைவடைந்துள்ளன. அதாவது ரயில்வே தரப்பில் அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன. மாநில அரசு சார்பில் மேற்கொள்ளப்படும் பணி நடைபெறுகிறது. இந்நிலையம் விரைவில் திறக்கப்படும்" என்றார்.

# திருப்பூரில் வங்க தேசத்தினர் 6 பேர் கைது: தமிழகம் முழுவதும் கண்காணிப்பு தீவிரம்



திருப்பூர், பிப்.24-

திருப்பூரில் வங்க தேசத்தினர் 6 பேர் கைதான நிலையில், பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக வேறு யாரேனும் உள்ளனரா என்பது தொடர்பாக தமிழகம் முழுவதும் போலீஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.

பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாகவும், பாதுகாப்பு படையினரை அச்சுறுத்தும் வகையிலும் டெல்லியில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. இதில் தொடர்புடையவர்களுக்கு ஆதரவாக, திருப்பூரில் முறைகேடாக தங்கியிக்கும் வங்க தேசத்தினர் சிலர் செயல்பட்டதாகக் கூறி டெல்லி போலீஸார் அம்மாபாளையம், பல்லடம், ஊத்துக்குளியைச் சேர்ந்த 6 பேரை கைது செய்து, டெல்லிக்கு அழைத்துச் சென்றனர்.

தொடர்ந்து, திருப்பூர் மாநகரில் பல்வேறு இடங்களில் தங்கியுள்ள வடமாநிலத்தவர் மற்றும் சந்தேக நபர்கள் குறித்து போலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். பிடிபட்ட 6 பேருடன் தொடர்பில் இருந்த நபர்கள் குறித்தும் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

வங்க தேசத்தினர் தங்களை மேற்குவங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகூறி திருப்பூர் பனியன் நிறுவனங்களில் வேலைக்கு சேர்வதால், மேற்குவங்க மாநிலத் தொழிலாளர்கள் அதிகம் பணிபுரியும் இடங்களில் மத்திய, மாநில உளவுத் துறை போலீஸார் ரகசியமாக விசாரித்து வருகின்றனர்.

அதேபோல, ஏற்கெனவே கைதானவர்கள் மற்றும் முறைகேடாகத் தங்கியிருந்து கைதானவர்கள் யாரும் தொடர்பில் உள்ளார்களா என்பது தொடர்பாகவும் உளவுத் துறை போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து திருப்பூர் காவல் ஆணையர் ராஜேந்திரன் கூறும்போது, "திருப்பூரில் கைது செய்யப்பட்ட 6 பேரிடம், டெல்லி போலீஸார் விசாரிக்கத் தொடங்கி உள்ளனர். அவர்களுடன் வேறு யாருக்கும் தொடர்புள்ளதா என்பது இனிமேல் தான் தெரியவரும். கடந்த சில மாதங்களில் 200க்கும் மேற்பட்ட வங்க தேசத்தினர் திருப்பூரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தை அடுத்து, அனைத்து இடங்களிலும் சந்தேகப்படும் நபர்கள் தொடர்பாக ரகசியமாக விசாரித்து வருகிறோம். குற்றவாளிகள் யாரும் தப்ப முடியாது" என்றார்.

இதற்கிடையில், பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மட்டுமின்றி, வேறு பயங்கரவாத அமைப்புகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவாளர்கள் யாரேனும் உள்ளனரா என்று தமிழக தீவிரவாத தடுப்புப் பிரிவு போலீஸார் தீவிரமாக விசாரித்து வருவதுடன், தமிழகம் முழுவதும் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.

இவர்களுக்கு உதவியாக மாநில உளவுப் பிரிவு போலீஸாரும் களத்தில் இறக்கியுள்ளனர். சந்தேக நபர்கள் யாராக இருந்தாலும், அவர்களைப் பிடித்து விசாரிக்க டிஜிபி உத்தரவிட்டுள்ளார். மேலும், சந்தேக நபர்கள் குறித்து தகவல்களைத் தெரிவிக்கலாம் என்றும், தகவல் அளிப்போரின் விவரம் ரகசியமாக வைக்கப்படும் என்றும் காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



■ கரூர் மாவட்ட அரவாக்குறிச்சி மாவீரன் வீரஞ்சமின் திருஉருவச் சிலை, மணிமண்டபம் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பேரவை மாநில தலைவர் குறிஞ்சி பாஸ் சந்திரசேகர் மாமன்னர் அவர்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். சட்ட ஆலோசகர் ஒன்றிய முன்னாள் திமுக கழகம் மற்றும் கரூர் மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# தொழிலாளர் சட்டங்களைப் பறிக்காதே!" தபால் நிலையத்தில் ஏஐடியூசி கட்டுமானத் தொழிலாளர்கள் திரண்டு மனுப் போர்



மதுரை, பிப். 24-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தபால் நிலையத்தில் தமிழ்நாடு ஏஐடியூசி கட்டுமான தொழில் சங்கத்தின் சார்பில் மத்திய மோடி அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டது சங்கத்தின் பொதுச்செயலாளர் இருளாண்டி, தலைமையிலும் மாவட்ட தலைவர் அலெக்ஸ், முன்னிலையிலும் 50க்கும் மேற்பட்ட மனுக்கள் அனுப்பப்பட்டது.

இதில் அவர்கள் கோரிக்கையாக கட்டுமான தொழிலாளர்கள் வாழ்வாதரத்தை பாதுகாக்கும் வகையில் சட்டங்களை முறைப்படுத்தவும், நலவாரிய செயல்பாட்டினை விரைந்து பயனளிகளுக்கு வழங்கிடவும். நீண்ட போராட்ட கோரிக்கைகளுக்குப் பிறகு 1996 இல் இரண்டு சட்டங்களை கட்டுமான தொழிலாளர்களுக்காக இந்திய பாராளுமன்றம் வழங்கியது. அந்த சட்டங்களின் முழு பயன்களையும் இந்திய கட்டட கட்டுமான தொழிலாளர்கள் அனுபவிக்கும் முன்பாகவே அந்த இரண்டு சட்டங்களும் நீங்கள் கைவிட்டு விட்டீர்கள் இதை நியாயம் அல்ல அதனால் எங்களது தேசிய பொது குழு கீழ்காணும் கோரிக்கைகளை தங்களது முன்பாக வைப்பது என்று முடிவு செய்தபடி முன் வைக்கிறோம். தங்கள் அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று நம்புகிறோம்.

*முக்கியக் கோரிக்கைகள்:*

புதிய நான்கு சட்ட தொகுப்புகள் எங்களுக்கு ஏற்புடையதுதல்ல, 1923தொடங்கி 1996 வரை நாடாளுமன்றம் இந்திய பொருளாதாரகளுக்காக இயற்றிய 44 தொழிலாளர் சட்டங்களும் மீண்டும் அமல்படுத்தப்பட வேண்டும். 1996கட்டட

தொழிலாளர் மத்திய சட்டம் 1996 கட்டடத்தொழிலாளர் நலவாரிய வசூல் சட்டம் இரண்டு சட்டங்களும் மீண்டும் நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும். இது போன்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அனுப்பப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட நிர்வாகிகள் பாண்டியன், ராமர், செந்தில், பழனிச்சாமி, காளியப்பன் உள்ளிட்ட கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் சிறப்பு தீவிர திருத்தம் 2026 மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்ட தொகுதிகளுக்கும் இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் வெளியிட்டார்.



■ சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி சபை யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனையின் பேரில், மாநிலத் தலைவர் ஆர்.தன்ராஜ் வழிகாட்டுதலுடன், டாக்டர் ஜேகேகே முனிராஜா தொழிற்பயிற்சி நிலையத்தின் துணை முதல்வர் பி ஈஸ்வரன் அவர்களின் நீண்ட கால பல்வேறு சேவைகளை பாராட்டி, அவரை கௌரவிக்கும் வகையில், நேதாஜியின் சிறப்பு விருதினை மாவட்ட செயலாளர் ஜி தங்கவேல் அவர்கள் வழங்கினார்.

# 'வாக்குறுதியை நிறைவேற்றாத திமுக அரசை மருத்துவ சமுதாயம் மன்னிக்காது'



சென்னை, பிப்.24-

அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு தலைவர் மருத்துவர் எஸ்.பெருமாள் பிள்ளை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: 'திமுக ஆட்சி அமைந்ததும் அரசு மருத்துவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்' என்று கடந்த 2019ல் மருத்துவர்கள் போராட்டத்தின்போது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஸ்டாலின் நேரில் வாக்குறுதி அளித்தார்.

ஆனால், சொன்னதை செய்யவில்லை. இத்தனைக்கும் ஸ்டாலின் முதல்வராகப்பதவியேற்ற போது, கரோனா தொற்றின் உச்சத்தால் அசாதாரண சூழ்நிலை நிலவியது. அந்த கடினமான தருணத்தில் உறுதுணையாக இருந்த அரசு மருத்துவர்களை அவரால் நிச்சயம் மறக்க முடியாது.

முன்னாள் முதல்வர் கருணாநிதி வழியில் நடக்கும் ஆட்சி என பெருமையாக சொல்லிக் கொள்கின்றனர். ஆனால், அவர் கொண்டுவந்த அரசாணை 354ஐ அமல்படுத்தவில்லை. அரசு மருத்துவர்களின் ஊதியக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் நீதி கிடைக்கவில்லை.

எய்ம்ஸுக்கு இணையாக அரசு மருத்துவர்களுக்கு ஊதியம் தர வேண்டும் என்று தேசிய மருத்துவ ஆணையம் அறிவுறுத்தியும் செயல்படுத்தவில்லை. மருத்துவர், செவிலியர் பணியிடங்களை அதிகரிக்கவில்லை.

'அரசு மருத்துவர்களுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும். கரோனா காலத்தில் பணியின்போது உயிரிழந்த அரசு மருத்துவர் விவேகானந்தனின் மனைவிக்கு அரசுப் பணி வழங்கப்படும்' என்று சட்டப்பேரவையின் கடைசி கூட்டத்தொடரிலாவது முதல்வர் அறிவிப்பார் என்று நம்பினோம். ஆனால், ஏமாற்றமே மிஞ்சியது.

மருத்துவர்களின் சேவையை அங்கீகரிக்க மறுக்கும் ஒரே மாநிலமாக தமிழகம் உள்ளது. உயிர்காக்கும் துறையின் இதயமாக உள்ள அரசு மருத்துவர்களுக்கு அளித்த வாக்குறுதியை ஆட்சிக் காலம் முழுவதுமே நிறைவேற்றாமல் இருப்பதை மருத்துவ சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது என்பதை வேதனையுடன் கூறுகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# டிஜிட்டல் கைது மோசடி மூலம் 70 வயது மூதாட்டியிடம் ரூ.3 கோடி பறிப்பு டேராடூனில் நடந்தது என்ன

டேராடூன், பிப்.24-

டிஜிட்டல் கைது மோசடி மூலம் 70 வயது மூதாட்டியிடம் ரூ.3.09 கோடியை பறித்த கும்பல் குறித்து போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனைச் சேர்ந்த 70 வயது மூதாட்டி ஒருவர் 3 நாட்களுக்கு முன்பு டேராடூன் சைபர் போலீஸில் ஒரு புகாரைக் கொடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது: கடந்த ஆண்டு செப்டம்பர் 1ம் தேதி எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் தன்னை சிபிஐ அதிகாரி என்றும், ரூ.68 கோடி சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் எனது செல்போன் எண்ணுக்கு தொடர்பு இருப்பதாகவும், நான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவேன் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த வழக்கில் டிஜிட்டல் கைது செய்யப்பட்டுள்ளீர்கள் என்றும், இந்த விவகாரத்தை யாரிடமாவது தெரிவித்தால் உங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த நபர் மிரட்டினார். எனவே, இந்த விஷயத்தில் உங்களை கைது செய்யாமல் இருக்க வேண்டுமானால், வங்கி விவரங்களை தர வேண்டும் என்றும், விசாரணை முடிந்ததும் உங்களது பணம் உங்களிடமே திரும்பி வந்து விடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு செப்டம்பர் முதல் அக்டோபர் மாதம் வரை என்னுடைய வங்கிக் கணக்கில் இருந்து ரூ.3.09 கோடியை அவர்கள் எடுத்துவிட்டனர்.

அதன் பின்னரே இது மோசடி என்று எனக்குத் தெரிந்தது. என்னுடைய நிரந்தர வைப்பு, பங்குகளை விற்றது மூலம் கிடைத்த பணம், நகைகளை அடகு வைத்து பணத்தைக் கொடுத்தேன். ஒவ்வொரு முறை பணம் அனுப்பும் போதும் நீங்கள் கைது செய்யப்படாமல் இருக்கவே இந்த பணம் என்று அவர்கள் நம்பிக்கை ஊட்டினர். இவ்வாறு அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக டேராடூன் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பல்லடம் அதிமுகவிற்கு புதிய முகவரி உடுமலை ராதாகிருஷ்ணன், எம்எஸ்எம் ஆனந்தன் பங்கேற்பு



திருப்பூர், பிப். 24-

திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பல்லடம் நகரக் கழக அதிமுக புதிய அலுவலகம், பல்லடம் நால்ரோடு சந்திப்பில் உள்ள மாருதி காம்ப்ளக்ஸில் அமைக்கப்பட்டுள்ளது.

*அலுவலகத் திறப்பு விழா:*

பல்லடம் நகரக் கழகச் செயலாளர் பானு எம். பழனிச்சாமி முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே. ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு, கழக அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

பல்லடம் சட்டமன்ற உறுப்பினரும், கழக அமைப்புச் செயலாளருமான எம்.எஸ்.எம். ஆனந்தன் குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் எக்ஸ் எம்.எல்.ஏ. கே.பி. பரமசிவம், மாநில விவசாய பிரிவு இணைச் செயலாளர், கரைப்புதூர் பல்லடம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என். நடராஜன் எக்ஸ் எம்.எல்.ஏ. பொதுக்குழு உறுப்பினர், தண்ணீர் பந்தல் பி. நடராஜன் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், பல்லடம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ. சித்துராஜ், பல்லடம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வி. எம். கோகுல், பல்லடம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ். சுப்பிரமணியம், பொங்கலூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் யூ. எஸ். பழனிச்சாமி, பொங்கலூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் காட்டூர் எல். சிவப்பிரகாஷ், முத்தண்ணாம்பாளையம் பகுதி கழகச் செயலாளர் என். மோகன் ராஜ், வீரபாண்டி கிழக்கு பகுதி கழகச் செயலாளர் என். ராம் பிரபு பி. ஏ., பி. எல்., ஆண்டிப்பாளையம் பகுதி கழகச் செயலாளர் என். கவிக்குமார், வீரபாண்டி மேற்கு பகுதி கழகச் செயலாளர் எஸ், சோமசுந்தரம் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பகுதி, வட்டம், வார்டு கிளைக் கழகத்தைச் சார்ந்த அனைத்து கழகம் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள் கூட்டுறவு சங்க நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள், அனைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள்.




■ தென்காசி மாவட்டம், ஆய்க்குடி ஜே.பி. பொறியியல் கல்லூரியில் எதிர் வரும் சட்டமன்ற தேர்தல் 2026 ஐ முன்னிட்டு சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிகளில் பணிபுரிய உள்ள மண்டல அலுவலர்கள், மண்டல காவல் அலுவலர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.



■ திண்டுக்கல் மாவட்டம் மாநகராட்சி சார்பாக தேசிய வைட்டமின் ஏ குறைபாடு தடுப்பு திட்டத்தில், 6 மாதம் முதல் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், வைட்டமின் ஏ திரவம் வருடத்திற்கு இரண்டு முறை செலுத்தும் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் சரவணன் தொடங்கி வைத்தார்..




■ திண்டுக்கல் மாவட்டத்தில் 2026ம் ஆண்டு இறுதி வாக்காளர் பட்டியலை அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மாவட்டஆட்சித் தலைவர் சரவணன் வெளியிட்டார். உடன் அரசு துறை அதிகாரிகள் இருந்தனர்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வேடசந்தூர் தாலுகா பிலாத்து கிராமம் வாலிசெட்டிபட்டி காட்டுநாயக்கர் இனத்தை சார்ந்த பள்ளி மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் ஜாதி சான்றிதழ் வழங்க கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர்.



# திண்டல் மலையில் அரோகரா முழக்கம் அமைச்சர்கள் முன்னிலையில் வேலாயுத சுவாமி கோயில் கும்பாபிஷேகம்

திண்டல், பிப். 24-

கொங்கு மண்டலத்தின் பிரசித்தி பெற்ற ஆன்மீகத் தலங்களில் ஒன்றான ஈரோடு, அருள்மிகு திண்டல்மலை வேலாயுத சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது.

*அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு:*

அமைச்சர்கள் சு. முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், பி.கே.சேகர் பாபு கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர். அமைச்சர்களுடன் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், இந்து சமய அறநிலையத்துறை உயர் அதிகாரிகள் விழாவில் பங்கேற்றனர். மேலும், மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கலந்து கொண்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, மிறிஷி அவர்கள் தலைமையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# புதிய வாக்காளர்களின் எழுச்சி! சேலத்தில் 62,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சேர்ப்பு: ஆட்சியர் பெருமிதம்




சேலம், பிப். 24-

சேலம் மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, 01.01.2026ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி துவங்கப்பட்டது. டிசம்பர் 2025 மற்றும் ஜனவரி 2026 ஆகிய மாதங்களில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. 10.02.2026 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

*வாக்காளர் புள்ளிவிவரங்கள் (11 தொகுதிகள்):*


ஆண்கள்: 13,70,962 பெண்கள்: 13,84,548 இதரர்: 320, மொத்த வாக்காளர்கள்: 27,55,830, புதிதாக சேர்க்கப்பட்டவர்கள்: 1,18,166, நீக்கப்பட்டவர்கள்: 30,444, 18 19 வயதுக்குட்பட்டவர்கள்: 62,021

*விண்ணப்பிக்கும் முறைகள்:*

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் செய்ய விரும்புவோர் கீழே உள்ள வழிகளைப் பயன்படுத்தலாம். நேரடியாக: வாக்குப் பதிவு மையங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி/மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் படிவங்களை சமர்ப்பிக்கலாம்.

இணையதளம்: voters.eci.gov.in என்ற முகவரியின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

செயலி: Voter Helpline App என்ற கைபேசி செயலி மூலமும் விண்ணப்பிக்கலாம் என்று சேலம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.



# மாலை மாற்றிய மாற்றுத்திறனாளிகள்: திருச்சியில் சோழிய வேளாளர் சங்கம் - வணிகர் கூட்டமைப்பு நடத்திய முப்பெரும் விழா நெகிழ்ச்சி

திருச்சி, பிப். 24-

திருச்சி தில்லைநகர் கி.ஆ.பெ. விஸ்வநாதன் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு (TVSK) மற்றும் தமிழ்நாடு சோழிய வேளாளர் சங்கம் இணைந்து நடத்திய முப்பெரும் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கியது. தமிழ்நாடு சோழிய வேளாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் கூஷி.யி. செந்தில் பிள்ளை M.S. (ஆர்த்தோ) குத்துவிளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். நிகழ்ச்சிக்கு TV SK தலைவர் கராத்தே Dr. மி.கண்ணன் தலைமை வகித்தார்.

*வரவேற்புரை:*

தமிழ் பிரஸ் கிளப் மாநில செயற்குழு உறுப்பினரும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பின் திருச்சி மாவட்டச் செயலாளருமான Dr. G. பாலசுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.


சுயவரம் மற்றும் நெகிழ்ச்சிச் சம்பவம்:

இந்த விழாவின் முக்கிய நிகழ்வாக நடைபெற்ற 'திருமண சுயவரம்' நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தினர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இதில் இரு குடும்ப பெற்றோர்களின் சம்மதத்துடன் ஒரு ஜோடி மாற்றுத்திறனாளிகளுக்குத் திருமணம் உறுதி செய்யப்பட்டு, மாலை மாற்றிக் கொண்ட நிகழ்வு நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

மாநிலத் தலைவர் டாக்டர் V.J. செந்தில் பிள்ளை மற்றும் நிர்வாகிகள் மணமக்களை வாழ்த்திப் பேசினர். விழாவில் சமூக ஆர்வலர்கள், வணிகர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சிறாருக்குச் சமூக ஊடகத் தடை: நிதானம் அவசியம்

இந்தியா, பிப். 24-



இந்தியாவில் 16 வயதுக்குட்பட்டோர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தக் கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்துவருவது மிக முக்கியமான நகர்வு. இவ்விஷயத்தில், கவனமான அணுகுமுறையை அரசு கையாள்வது அவசியம். இன்றைய நவீன உலகில் குழந்தைகள், இளையோர் மீது சமூக ஊடகங்கள் ஏற்படுத்திவரும் எதிர்மறைத் தாக்கம் உலக அளவில் பேசுபொருளாகி உள்ளது.

இளம் வயதினரிடமிருந்து சமூக ஊடகங்களை விலக்கிவைக்க வேண்டும் எனக் குரல்கள் ஒலித்துவரும் நிலையில், இதில் முன்னோடி நாடாக, 16 வயதுக்கு உள்பட்ட சிறார் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கடந்த டிசம்பர்10இல் ஆஸ்திரேலியா தடைசெய்தது.

இதன்படி, அந்நாட்டுச் சிறார் யாரும் புதிதாகச் சமூக ஊடகக் கணக்கு தொடங்க முடியாது; பயன்பாட்டில் உள்ள கணக்குகள் நீக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டில் 15 வயதுக்குட்பட்டோருக்கு இதே தடை அமலுக்கு வர உள்ளது. டென்மார்க், ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் இத்தகைய கட்டுப்பாடு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

# முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு கும்பாபிஷேக விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி நிதியுதவி



திண்டுக்கல், பிப். 24-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி, திரு.வி.க. நகரில் அமைந்துள்ள அருள்மிகு தண்டுமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

*நிவாரண உதவியும் மனிதாபிமானமும்:*

விழாவின் போது, முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு வந்த முத்துச்செல்வி என்ற பெண்ணின் நிலையைக் கண்டு நெகிழ்ந்த அமைச்சர், அவருக்கு உடனடியாக நிதியுதவி வழங்கினார். மேலும், அவருக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகளுக்குத் தன்னை எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்து நெகிழ்ச்சியை ஏற்படுத்தினார்.

அப்போது கோவில் கமிட்டியைச் சேர்ந்த பூசாரி அர்ஜீனன், பொருளாளர் எஸ்.ஆர்.முருகன், நிர்வாகி வீரமணி ஆகியோர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மாலை மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றனர். அப்பகுதி பொதுமக்களிடம் பேசிய அமைச்சர் 17வது வார்டு ஜீவா நகர் மற்றும் திரு.வி.க. நகர் பகுதியில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் சாலை வசதி, பேவர்பிளாக் கற்கள் சாலை மற்றும் வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அங்கன்வாடி மையத்திற்கு சொந்த கட்டிடம் வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்துர் நடராஜன், ஒன்றிய செயலாளர் முருகேசன், பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னாள் செயலாளர் மோகன்ராஜ், பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் எம்.வி.முருகன், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ராஜீ, சாந்தி, வேல்விழி, தாமரைச் செல்வி உட்பட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை தண்டுமாரியம்மன் கோவில் பூசாரி அர்ஜூனன், பொருளார் எஸ்.ஆர்.முருகன், நிர்வாகிகள் வீரமணி, வழக்கறிஞர் செல்வராஜ், கே.சி.ராமசாமி, சுந்தரபாண்டி, மாசிமலை தலைமையிலான விழா கமிட்டியினர் சிறப்பாக செய்திருந்தனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000